## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை–மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லம்– புதுக்கோட்டை மாவட்டத்தில் வேர்டு தொண்டு நிறுவனத்தை அரசின் நிதி உதவியுடன் செயல்படக்கூடிய தொண்டு நிறுவனமாக அங்கீகரித்து – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.48 நாள்:19–10–2015
மன்மத, ஐப்பசி 2,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.83, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 10–12–2014.
2. அரசாணை(நிலை) எண்.17, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 02–03–2015.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.1112/மஇக4/2014, நாள் 16.09.2015.

--------

**ஆணை**:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை தவிர்த்து, மீதமுள்ள 21 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை 01.12.2014 முதல் புதியதாக துவக்கிட அனுமதியும் மற்றும் ஒரு இல்லத்திற்கு 4 மாதங்களுக்கான செலவினமாக ரூ.3,51,600/– வீதம், 21 இல்லங்களுக்கு ரூ.73,83,600/–ஐ நிதி ஒப்பளிப்பு வழங்கியும், அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2014–15 ஆம் நிதியாண்டில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை புதியதாக துவக்கிட ஆணையிடப்பட்டுள்ள 21 மாவட்டங்களில், புதுக்கோட்டை மாவட்டத்தினை தவிர்த்து, மீதமுள்ள 20 மாவட்டங்களில், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை, மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் பெறப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்படுத்திட மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஆணையிடப்பட்டுள்ளது.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தில் வேர்டு தொண்டு நிறுவனம் வல்லத்திராக்கோட்டை, ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம் என்ற தொண்டு நிறுவனத்தினை அரசின்

நிதியுதவியுடன் செயல்படக்கூடிய தொண்டு நிறுவனமாக அனுமதிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஆகியோரின் கருத்துருவினை மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார். எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வேர்டு தொண்டு நிறுவனத்தினை அரசின் நிதியுதவியுடன் செயல்படக்கூடிய தொண்டு நிறுவனமாக அங்கீகரித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2014–15 ஆம் நிதியாண்டில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை புதியதாக துவக்கிட ஆணையிடப்பட்டுள்ள 21 மாவட்டங்களில், புதுக்கோட்டை மாவட்டத்தினை தவிர்த்து, மீதமுள்ள 20 மாவட்டங்களில், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை, மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் பெறப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்படுத்திட அரசு ஆணையிட்டுள்ள நிலையில், தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, புதுக்கோட்டை மாவட்டத்தில் வேர்டு தொண்டு நிறுவனம் வல்லத்திராக்கோட்டை, ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம் என்ற தொண்டு நிறுவனத்தினை அரசின் நிதியுதவியுடன் செயல்படக்கூடிய தொண்டு நிறுவனமாக அங்கீகரித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலும் இத்தொண்டு நிறுவனம் சரியாக செயல்படாதபட்சத்தில் நீக்கும் பொழுது அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்.
புதுக்கோட்டை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**நகல்:–**
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.